**O.S.No. 29/2022**

**பி.சா.1 விஜயகுமார் இன்று 06.07.2026 மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை தொடர்ந்து செய்யப்படுகிறார்:**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் இன்று தாக்கல் செய்யும் என்கூடுதல் நிருபண பிரமாண வாக்குமூலத்தை என் கூடுதல் சாட்சிமாக ஏற்க வேண்டுகிறேன்.

பாலகிருஷ்ணனுக்கு 24.07.1990 தேதியிட்டு அங்கம்மாள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் இணைய சான்று நகல் பி.சா.ஆ–13 (இந்த ஆவணம் இந்த சாட்சி மூலம் குறியீடு செய்ய முடியாது என்று வாதி தரப்பில் செய்த ஆட்சேபனையை பதிவு செய்து ஆவணம் குறியீடு செய்யப்பட்டது)

Franciscan Missionaries of Mary Societyக்கு 23.06.2003 தேதியிட்டு அங்கம்மாள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் இணைய சான்று நகல் **பி.சா.ஆ–14** (இந்த ஆவணம் இந்த சாட்சி மூலம் குறியீடு செய்ய முடியாது என்று வாதி தரப்பில் செய்த ஆட்சேபனையை பதிவு செய்து ஆவணம் குறியீடு செய்யப்பட்டது).

கமலாவிற்கு அங்கம்மாள் ஏற்படுத்திக்கொடுத்த ஆவண எண் 1362/2000 பொறுத்த 07.04.2026 தேதியிட்ட வில்லங்க சான்று பதிவிறக்க நகல் **பி.சா.ஆ–15,**

தாவா சொத்து பொறுத்து 07.04.2026 தேதியிட்ட 01.01.1990 முதல் 06.04.2026 வரைக்கான வில்லங்க சான்று பதிவிறக்க நகல் **பி.சா.ஆ–16,**

தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் இன்று என் தரப்பில் குறியீடு செய்த பி.சா.ஆ–13 மற்றும் பி.சா.ஆ–14 ஆவணங்களை என்னுடைய எதிர்

வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்பது சரி. அந்த ஆவணங்களில் நான் தரப்பினர் அல்ல என்பது சரி. அந்த பி.சா.ஆ–13 ஆவணத்தை என் தாயார் அங்கம்மாள் ஏற்படுத்திக் – கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தவறு. அந்த ஆவணத்தில் என் தாயாரின் விலாசமாக ஓம் கண்ணாராம் பில்டிங் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சரி. அதில் சாட்சி கையொப்பமிட்டுள்ள தீனதயாளு என் தகப்பனாரின் தம்பி என்பது சரி. தீனதயாளுக்கும் விலாசமாக அந்த ஆவணத்தில் ஓம் கண்ணாராம் பில்டிங் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சரி. பி.சா.ஆ–13 சம்பந்தப்பட்ட சொத்தின் சர்வே எண் 743/1 என்றால் சரி. அதன் தற்போதைய சர்வே எண் 713/1A என்பது சரி. எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோதே பி.சா.ஆ–13 என் கைவசம் இருந்ததா என்றால் இல்லை, அதற்கு நகல் நான் சமீபத்தில்தான் பெற்றேன். என்னுடைய எதிர் வழக்குரையில் பக்கம் எண் 5ல் ஆவணத்தின் ஆவண எண் உட்பட விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்பது சரி, எனவே அந்த ஆவணத்தின் நகல் அப்பொழுதே என் கைவசம் எடுத்து வைத்திருந்ததை வைத்துதான் அவ்வாறு ஆவணத்தில் நான் அதன் எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறு.

பி.சா.ஆ–14 ஆவணத்தை ஒரு சர்ச்சுக்கு என் தாயார் எழுதி வைத்துள்ளார். அந்த ஆவணத்தில் என் தாயாரின் வசிப்பிடமாக 7/302, ஓம் கண்ணாராம் பில்டிங் என்று போடப்பட்டுள்ளது என்பது சரி. அந்த ஆவணத்தில் சர்வே எண் 743/1 அதன் புதிய சர்வே எண் 713/1A என்று கண்டுள்ளது என்பது சரி. பி.சா.ஆ–14 ஆவணம் ஏற்பட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியும். அந்த ஆவணம் 23.06.2003ல் ஏற்பட்டது என்பது சரி. அந்த சொத்து 1965ஆம் ஆண்டில் என் அம்மாவிற்கு அவர் அப்பா வாங்கி கொடுத்த வகையில் கிடைத்தது. என் அம்மாவிற்கு அவர் தகப்பனார் நஞ்சம்மாநாயுடு அந்த சொத்தை வாங்கி கொடுத்ததாக

நான் கூறுகிறேனா என்றால் ஆமாம். அந்த ஆவணத்திலும் அந்த சொத்தை என் அம்மாவிற்கு அவர் அப்பா வாங்கி கொடுத்ததாகதான் உள்ளது என்றால் ஆமாம். 1965ல் என் தாயாருக்கு ஏற்பட்ட அந்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகையான ரூபாய் 10,000/–ல் ரூபாய் 3,500/– தொகையை தன் தகப்பனார் தனக்கு சீதனமாக கொடுத்த தொகையை கொண்டும், மீத தொகையை தன் சேமிப்பில் இருந்து கொடுத்தும் வாங்கிய சொத்தாக குறிப்பிட்டிருந்தால் அது தவறா என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் சொல்லமுடியும்.

அங்கம்மாள் ஒரு கமலாவிற்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய பத்திரத்தின் தேதி 23.08.2000 என்றால் சரி. அதன் புல எண் 743/1A என்று பி.சா.ஆ–15 வில்லங்க சான்றில் கண்டுள்ளது என்பது சரி. அங்கம்மாள் ஒரு பாலகிருஷ்ணனுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய பத்திரத்தை காண்பிப்பதற்கு பி.சா.ஆ–16 வில்லங்க சான்றை தாக்கல் செய்துள்ளேன் என்பது சரி. சர்வே எண் 743/1Aன் மொத்த விஸ்தீரணம் 28 சென்ட் ஆகும். கமலாவிற்கும், பாலகிருஷ்ணனுக்கும் என் தாயார் அவ்வாறு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய பத்திரங்களில் கண்ட சொத்துக்களும், பூர்வீக சொத்துக்கள்தான் என்றும், அதனால் வாதிகள் கோரியபடி பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கதக்கது என்றும், என் தாயார் நல்ல உடல்நலத்துடன் இருந்தும் அவரை விசாரித்தால் உண்மை விவரங்கள் தெரிந்துவிடும் என்பதற்காக அவரை சாட்சியாக விசாரிக்காமல் இருக்கிறேன் என்றும் சொன்னால் தவறு.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.07.06 16:45:53 +0530